# கல்வி கற்பதால் ஏற்படும் நன்மைகள்

மீன்பிடி கிராமமாகவும், காடாகவும் இருந்த நமது சிங்கை இன்று முன்னேறி ஒரு வர்த்தக மையமானதற்குக் கல்வியினால் நாம் பெற்ற அறிவே காரணம் ஆகும். கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்குகிறது. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில், கல்வியின்றி வாழும் எம்மனிதனையும் நடமாடும் பிணமாகத்தான் கருதவேண்டும்.

கல்வி என்பது அழிவு காணாத ஒரு வரப்பிரசாதம். கல்வி கொள்ளையடிக்கப்பட முடியாத பொக்கிஷம்; உயிர் உள்ளவரை நிலைத்திருக்கும் செல்வம். பணத்தைத் திருடிவிடலாம், மனிதர்களை கொன்றுவிடலாம், இயற்கையை அழித்து விடலாம். ஆனால் தீ, வெள்ளம், நிலநடுக்கம் போன்று எந்தச் சக்தி வந்தாலும், கல்வியை அழிக்கவே முடியாது. அதனால்தான் “வெள்ளத்தால் போகாது; வெந்தணலால் வேகாது” என்று பாடினார் ஒரு புலவர்.

இன்று எல்லா வேலையிடங்களிலும், கல்வி அறிவுபெற்றிருக்கும் ஒருவரைத்தான் முதலாளிகள் எதிர்பார்க்கின்றனரே தவிர, நாம் எவ்வளவு நாட்கள் அத்துறையில் பாடுபட்டிருக்கிறோம் என்பதை அல்ல. இன்று ஒரு பட்டதாரிக்கே வேலை கிடைப்பது கடினமாக உள்ளது. இச் சூழலில் கல்வி இல்லாத ஒருவரின் நிலை என்ன ஆகும்?

பணமும் பிற செல்வங்களும் ஒரு மனிதனுக்கு மரியாதைத் தேடித் தருவதில்லை. ஆனால், கல்வியிடம் மட்டும்தான் மரியாதையைத் தேடித்தரும் இயல்பு இருக்கிறது. சமுதாயத்தில் பேரும் புகழும் உள்ளவர்களிடம் கல்வியின் உயர்வைக் காணலாம். நமது முன்னோர்கள் பலர் கல்வியால் தான் வாழ்க்கையில் முன்னேறினர்.

கல்வி ஓர் அற்புதச் சாதனம். கல்வியால் நாம் உயிர்களைக் காப்பாற்றலாம். மலையைவிட, உயர்ந்த நிலையில் கட்டடங்களைக் கட்டலாம். மின்னல் வேகத்தில் பணிகளைச் செய்யலாம். புதிய நாட்டைக் கூட அமைக்கலாம்.

‘‘கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு’’ எனவே நாம் கல்வி கற்று, உயர்ந்தால் நாடும் உயரும். எனவே கல்வியைச் சுமையாக எண்ணாமல், பல நன்மைகளைத் தரும் ஓர் அற்புதமாக எண்ணுங்கள். பழைய தண்ணீரைப் புதிய குடிநீராக மாற்றியது போல், நாளை நீங்கள் பழைய மனிதர்களைப் புதியவர்களாக மாற்றலாம். கல்வியே புதுமைக்கு வழிவகுக்கும். கற்றலே வாழ்வுக்கு நலமளிக்கும்.

**அனுசியா**
**உயர்நிலை 2 விரைவு**